இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942–முரசு:83–ஒலி:200–திருவள்ளுவர் ஆண்டு 2056–மாசி 17–சனிக்கிழமை 01 மார்ச் 2025–கோவை ★ ★ 68 பக்கங்கள் + 16 சிறப்பிதழ் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 200 : Thiruvalluvar Year - 2056 - Maasi 17 - Saturday 01 March 2025 - Kovai ★ ★ 68 Pages + 16 சிறப்பிதழ் ₹ 5.00

# ஒரே இலக்கு - தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

## பிறந்த நாள் செய்தியில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, மார்ச் 1 -**

**கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் - 'திராவிட மாடல்' அரசின் நாயகர், மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் இன்று!**

**இந்நாளில் கழகத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "ஒரே இலக்கு - தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!" என்று சூளுரைத்துள்ளார்.**

**தமது இந்தப் பிறந்தநாள் செய்தியினை கழகத் தலைவர் அவர்கள், கண்கவர் காணொலியாகவும் வெளியிட்டு மகிழ்ந்துள்ளார்கள்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின், 'பிறந்த நாள் செய்தி' வருமாறு :-

**அனைவருக்கும் வணக்கம்!**

பொதுவாக நான் பிறந்தநாளைப் பெரிய அளவில் ஆடம்பரமாக – ஆர்ப்பாட்ட விழாவாகக் கொண்டாடுவது இல்லை! ஆனால், கழக உடன்பிறப்புகள் மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குவது, கழக அரசின் சாதனைகள் மற்றும் கழகக் கொள்கைகளை எடுத்துச் சொல்லும் பொதுக்கூட்டங்கள் நடத்துவது என்று செயல்படுவார்கள். இந்த முறை, என்னுடைய பிறந்தநாள் வேண்டுகோளாக, என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு ஒரு கோரிக்கையை முன் வைக்கிறேன்.

**இன்றைக்குத் தமிழ்நாடு தன்னுடைய உயிர்ப் பிரச்சினையான மொழிப்போரையும் - தன்னுடைய உரிமைப் பிரச்சினையான தொகுதி மறுசீரமைப்பையும் எதிர்கொண்டுள்ளது.**

**இதனுடைய உண்மையான நோக்கத்தை நீங்கள், மக்களிடம் கொண்டு சேர்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.**

தொகுதி மறுசீரமைப்பு என்பது, நமது மாநிலத்தின் சுயமரியாதை, சமூகநீதி, நம்முடைய சமூக நலத் திட்டங்களைப் பெரிதும் பாதிக்கும்!

இதை நீங்கள் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்! ஒவ்வொருவரும் மாநிலம் காக்க எழுந்து நிற்க வேண்டும்.!

இந்தியாவுக்கே வழிகாட்டியாக நாம் போராட்டத்தைத் தொடங்கினோம். இப்போது கர்நாடகா, பஞ்சாப், தெலங்கானா போன்ற மாநிலங்களில் இருந்து நமக்கான ஆதரவுக் குரல் வந்துள்ளது.

இதைப் பார்த்த ஒன்றிய அரசு, 'இந்தியைத் திணிக்கவில்லை' என்று சொல்லிக்கொண்டே அதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்!

**மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாததால், நமக்கான நிதியையும் இன்னும் தரவில்லை! அதேபோல், "தமிழ்நாட்டுக்கான தொகுதிகளைக் குறைக்க மாட்டோம்" என்று மட்டும்தான் சொல்கிறார்களே தவிர, 'மற்ற மாநிலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மாட்டோம்' என்று சொல்லவில்லை!**

**நாம் கேட்பது; மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளைப் பிரிக்காதீர்கள்! நாட்டினுடைய வளர்ச்சிக்காக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென்மாநிலங்களைத் தண்டிக்காதீர்கள்! அப்படி நடந்தால், அதைத் தமிழ்நாடும் தி.மு.க.வும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்!**

நாம் ஒரு உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்!

தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும், யாருக்காகவும் - எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்! தமிழ்நாட்டுக்காக நாம் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

நன்றி! வணக்கம்!

இவ்வாறு, தமது பிறந்த நாள் செய்தியில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

---

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள

## ஆர்.பாலகிருஷ்ணனின் பணி சிறக்கட்டும்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 1 -**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர். பால கிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-**

தமிழ்வழியில் படித்து, தமிழிலேயே குடிமைப் பணித் தேர்வெழுதி IAS ஆகி, தமிழாராய்ச்சியின் பரப்பைத் தமிழ்நாட்டையும் தாண்டி, ஏன் இன்றைய இந்திய நாட்டையும் தாண்டி அகலப்படுத்திய அறிஞர் பாலகிருஷ்ணன் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதையொட்டி மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடு வாழ்த்தினேன்.

1812இல் வெளியான திருக்குறளின் முதல் அச்சுப் பதிப்பை அன்பளிப்பாகத் தந்தார்!

அவர் பணி சிறந்து, தொல்தமிழர் வரலாற்றின் பல புதிய பக்கங்களை உலகுக்கு வெளிக்காட்டட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பிதழ்!



### இன்று வெளிவருகிறது!

**'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட நாயகர், மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் சிறப்பிதழ் இன்று (மார்ச் - 1) 'முரசொலி' நாளிதழுடன் வெளிவருகிறது!**

---


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கழகத் தலைவர்

## மு.க.ஸ்டாலின்

அவர்களின்

### 72வது பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!



**1-3-2025**

| | | |
|---|---|---|
| **காலை 8.00 மணி** | - | **பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல்** |
| **" "** | - | **முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல்** |
| **காலை 8.30 மணி** | - | **தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல்** |
| **காலை 9.00 மணி** | - | **அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கம் - வாழ்த்துப் பெறுதல்** |

**- தலைமைக் கழகம்**